# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC.No. 341/2022**

**Deposition of Witness for PW1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | மாயி | Caste | : |
| Father/Husband Name | : | ஒச்சாத்தேவர் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.06.2026**

**முதல்விசாரணை**

நான் தற்போது A. புதுப்பட்டி குடியிருந்து வருகிறேன். எதிரி எனது உறவினர் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2016ம் வருடம் எதிரி மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரி மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழுங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 18.03.2016ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் உசிலம்பட்டியில் இருந்த போது எங்கள் ஊரைச் சேர்ந்த பாண்டியராஜன் என்பவர் எனக்கு போன் செய்து எனது மனைவி பரமேஸ்வரி எதிரி அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், கழுத்தில் இருந்த நகையை

வழிபறி செய்துவிட்டு ஓடி விட்டார் என்று தகவல் சொன்னார் என்றும், நான் சென்று பார்த்த போது எனது மனைவி மேற்படி எதிரி தன்னை வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளை பேசினார் என்றும், அடித்து கீழே தள்ளிவிட்டு நகையை பிடுங்கி கொண்டு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், என்னிடம் கூறினார் என்றும், பின்னர் எனது மனைவியை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு சேர்த்தேன் என்றும், நான் கொடுத்தத புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு (எ.த.சா.ஆ. 1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.